DEPOSITION OF WITNESS.
(Chapter XXV, B.N.S.S)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, ANDIPATTI

Case No. CC.No. 42/2021
Deposition of PW2- திரு.சுந்தர்

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 27.06.2025.
எதிரி ஆஜர் இல்லை . BNSS பிரிவு 355 ன் படியான மனு அனுமதிக்கப்பட்டது.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1.) நான் B.E படித்துள்ளேன். நான் டெக்ஸ்டைல் தொழில் ஆண்டிபட்டியில் செய்து வருகிறேன். புகார்தார் ஒரே சமூகத்தைச் சேர்ந்தவர்கள் ஆனால் உறவு முறை இல்லை. ராசையாவுக்கு தற்போது 70 வயது இருக்கும். நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தில் என்னுடைய வயது 35 என்று சொல்லியுள்ளேன் என்றால் அதில் தவறாக குறிப்பிடப்பட்டுள்ளது என் வயது 41. என்னுடைய நிரூபண வாக்குமூலத்தை தாயர் செய்ய விபரம் நான் தான் சொன்னேன்.

2.) நான் என்னுடைய நிரூபண வாக்குமூலத்தை சொல்லும் போது எனக்கு வயது 35 என்று தான் சொன்னேன் என்றால் சரியல்ல. என்னுடைய நிரூபண வாக்குமூலத்தை தாயர் செய்ய விபரம் நான் சொல்லவில்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கின் எதிரி செல்வியை கடந்த 2,3 வருடங்களாக பார்த்துள்ளேன் முதன் முறையாக 23.10.2020 ம் தேதி எதிரியை பார்த்தேன் அதற்கு பின்பு இந்த வழக்கினை வாபஸ் பெற்றுக் கொள்ளும்படி புகார்தாரரிடம் சொல்வதற்காக எதிரி வந்த போது நான் அவரை பார்த்துள்ளேன்.

3.) வழக்கினை வாபஸ் பெற்றுக் கொள்ள சொல்லி எதிரி புகார்தாரரை பார்க்க வரும் போது பணத்தை நீங்கள் பெற்றுக் கொண்டபடியால் வழக்கை வாபஸ் பெற்றுக்கொள்ளுங்கள் என்று எதிரி சொன்ன விபரம் எனக்கு தெரியும் என்றால் அப்படி எதிரி சொல்லவில்லை. எதிரி புகார்தாரிடம் வழக்கு தொகையை கேட்கும் போது என்ன காரணத்திற்காக அந்த பணம் தேவை என்று சொல்லவில்லை கைமாற்றுக் கடனாக வேண்டும் என்று தான் சொன்னார்.

4.) எதிரிக்கும் புகார்தாரருக்கும் எவ்வாறு பழக்கம் என்று எனக்கு தெரியாது. எதிரி தாவா காசோலையை பூர்த்தி செய்யாமல் தான் கொடுத்தார். தாவா தொகையை பூர்த்தி செய்து கொள்ளுமாறு எதிரி புகார்தாரிடம் சொன்னார். மேற்படி விபரத்தை நான் என்னுடைய நிரூபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். புகார்தாரரின் தம்பி பொன்னுச்சாமியை எனக்கு தெரியும். புகார்தாரரும் அவருடைய தம்பியும் கூட்டாக பைனாஸ் தொழில் செய்து வருகிறார்களா என்றால் பொன்னுச்சாமி மட்டும் செய்து வருகிறார். புகார்தார் தனிப்பட்டு பைனாஸ் தொழில் செய்து வருகிறார் என்றால் இல்லை அவர் தனிப்பட்ட முறையில் வட்டிக்கு கொடுத்து வரலாம்.

5.) எதிரி என்ன தொழில் செய்து வருகிறார் என்று எனக்கு தெரியாது. எதிரிக்கு கணவர் உள்ளாரா என்பது பற்றி எனக்கு தெரியாது. எதிரி தனித்து வசித்து வருகிறாரா அல்லது மகனுடன் இருந்து வருகிறாரா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எதிரி காசோலையை கொடுத்த போது புகார்தாரர் வழக்கு பணத்தை கொடுத்தார். பணத்தை நேரடியாக கொடுத்தார்.பணத்தை எதிரி எண்ணிப் பார்த்தார். தொகை 500 ரூபாய் நோட்டுகளாக இருந்தது. எதிரி தனிப்பட்டு புகார்தாரிடம் கடன் வாங்க வேண்டிய அவசியம் இல்லை என்றால் சரியல்ல. எதிரியின் மகன் பிரபாகரன் தான் புகார்தாரரிடம் கடன் வாங்கியிருந்தார் என்றால் சரியல்ல.

6.) பிரபாகரன் வாங்கிய கடனுக்கு வட்டிக்காகத் தான் வழக்கு காசோலை பிரபாகரன் மூலம் கொடுக்கப்பட்டது என்றும், அந்த தாவா காசோலைக்குரிய பணமும் கொடுத்து தீர்க்கப்பட்டது என்றும் சொன்னால் சரியல்ல. இந்த வழக்கு சம்பவம் எனக்கு நேரடியாக தெரியாது என்றும், புகார்தாரர் என் சமூகத்தை சேர்ந்தவர் என்பதால் அவருக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken down by me in the open court in the presence of accused read over to the witness and admitted by him to be correct

FAZIL MOHAMED H

Digitally signed by FAZIL MOHAMED H
Date: 2025.06.27 16:03:07 +0530

Judicial Magistrate,
Andipatti.